

திருவாரூரில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டமேடை அமையவிருக்கும் மைதானத்தை முன்னாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி., ஆய்வு மேற்கொண்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே. கலைவாணன், பிரபாகரன் மற்றும் ஒன்றிய செயலாளர் சேகர் கலியபெருமாள்,நகர செயலாளர் வாரை.பிரகாஷ் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.



ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி அவர்கள் முடித்து வைத்து உரையாற்றினார்.

### கர்நாடகாவில் காங்கிரஸ் அமோக வெற்றி!

# இந்திய அரசியலில் திருப்புமுனையை ஏற்படுத்தும்!

## கட்சித் தலைவர்கள் கருத்து!

சென்னை, மே 15-

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளதற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**வைகோ (ம.தி.மு.க.):** கர்நாடக பேரவைத் தேர்தல் முடிவுகள் பா.ஜ.க. வெல்ல முடியாத அரசியல் சக்தி என்ற மாயத்தோற்றத்தை உடைத்து எறிந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்கு வாழ்த்துகள்.

**கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்):** கர்நாடகத்தில் பிரதமர் நரேந்திர மோடி வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டும் பா.ஜ.க. தோல்வியைத் தழுவியுள்ளது. இந்த தேர்தல் முடிவுகள் இந்திய அரசியலில் திருப்புமுனையை ஏற்படுத்தும். 2024 மக்களவைத் தேர்தலிலும் எதிரொலிக்கும்.

**இரா.முத்தரசன் (இந்தியக் கம்யூனிஸ்ட்):** வகுப்புவாத சக்திகளை அதிகாரத்தில் இருந்து கர்நாடக மக்கள் வெற்றிகரமாக வெளியேற்றி, தோல்வி அடையச் செய்துள்ளனர்.

**கமல்ஹாசன் (ம.நீ.ம.):** கர்நாடகத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதற்காக ராகுல் காந்திக்கு வாழ்த்துகள். பிரிவினைவாத கருத்தை கர்நாடக மக்கள் ஏற்கமாட்டார்கள் என்று நம்பினீர்கள். அது பொய்த்துப் போகாமல் மக்கள் வெற்றியைத் தந்துள்ளனர். இந்த வெற்றி சாதாரணமானது அல்ல.

**ஜவாஹிருல்லா (ம.ம.க.):** காங்கிரஸ் கட்சிக்கு வாழ்த்துகள். கர்நாடகத்தில் சமூக நல்லிணக்கம் தழைத்தோங்கவும், பா.ஜ.க. ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட முஸ்லிம்விரோத நடவடிக்கைகளை களைவதற்கும் காங்கிரஸ் ஆட்சி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அத்தலைவர்கள் கூறியுள்ளார்.

### கர்நாடகா புதிய முதல்வர் யார்?

# தலைமை முடிவு செய்யும் - காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் தீர்மானம்!

பெங்களூர்,மே.15-

கர்நாடக முதலமைச்சரை தலைமை முடிவு செய்ய வேண்டி காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கர்நாடக சட்டப்பேரவையில் உள்ள 224 தொகுதிகளுக்கு கடந்த 10ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் ஆளும் பாஜக, எதிர்கட்சியான காங்கிரஸ், குமாரசாமியின் மதசார்பற்ற ஜனதாதளம் ஆகிய கட்சிகளுக்கு இடையே மும்முனை போட்டி நடைபெற்றது. இந்த தேர்தலில் கூடுதலாக, அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியும் போட்டியிட்டது.

இதையடுத்து சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை தொடங்கியது முதலே முன்னிலை பெற்ற காங்கிரஸ் கட்சி 136 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

ஆட்சி அமைப்பதற்கு 113 இடங்கள் தேவையான நிலையில், அறுதிப் பெரும்பான்மையுடன் காங்கிரஸ் ஆட்சி அமைக்கிறது. ஆளும் பாஜக 65 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. மதச்சார்பற்ற ஜனதா தளம் 19 இடங்களிலும், இதர கட்சிகள் 4 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.

இதையடுத்து கர்நாடக காங்கிரஸ் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் நேற்று மாலை 5.30 மணிக்கு நடைபெறும் என கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவர், சட்டப்பேரவை உறுப்பினர் டி.கே.சிவகுமார் அறிவித்தார். இந்த கூட்டத்தில் கர்நாடகா மாநிலத்தில் முதலமைச்சர் குறித்து அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதன்படி பெங்களூரில் உள்ள தனியார் விடுதியில் கர்நாடக முதலமைச்சரை தேர்வு செய்வதற்கான காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களின் கூட்டம் தொடங்கியது. மேலிட பார்வையாளர்கள் சுஷில்குமார் ஷிண்டே, ஜிதேந்திர சிங், தீபக் பாபாரியா முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

இதில் கர்நாடக முதலமைச்சரை தலைமை முடிவு செய்ய வேண்டி, காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### மதவாதம் – சாதிவாதம் பேசும் பா.ஜ.க. வுக்கு

# கருநாடக மக்கள் தக்க பாடம் கற்பித்துவிட்டனர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே.15-

மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தி, ஆட்சியைப் பிடித்த பி.ஜே.பி.,க்கு கருநாடக மக்கள் தக்க பாடம் கற்பித்துவிட்டனர். இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களே ஒன்றிணைந்து கருநாடகம் காட்டிய பாதையைப் பின்தொடர்வீர் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கருநாடக மாநிலத்தில் 10.5.2023 அன்று மாநில சட்டமன்றத்திற்கான தேர்தல் நடைபெற்று முடிந்தது. கடந்த முறை ஆளும் கட்சியாக குறுக்குவழியில் ஆட்சியைப் பிடித்து, அமைக்கப்பட்ட கருநாடக மாநில பா.ஜ.க. ஆட்சி அதனை மய்யப்படுத்தி “தென்னாட்டில் முதலில் நாங்கள் நுழைவு வாயில் அமைத்துள்ளோம்; இதன்மூலம் தென்னாட்டையும் காவி மயமாக்கி, ஆர்.எஸ்.எஸ். கொள்கையை அமல்படுத்தும் பா.ஜ.க. ஆட்சிகளை உருவாக்குவோம்; அதற்கு பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, பா.ஜ.க. தலைவர் ஜே.பி. நட்டா, ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத், செயலாளர் ஹோசபுலே போன்றவர்களது வியூகங்களும், செல்வாக்கும், தாக்கமும், பிரச்சார வித்தைகளும் பயன்படும்“ என்று பெரிய கனவு கண்டார்கள்; மனப்பால் குடித்தார்கள்.

**‘காங்கிரஸ் இல்லாத இந்தியா!’ மோடியின் குரல் என்னாயிற்று!**

‘காங்கிரஸ் இல்லாத இந்தியா’ என்ற ஒரு கோஷத்தை மோடி எங்கும் முழங்கினாலும், இதுவரை பா.ஜ.க. ஆட்சிகள் அமைந்த மாநிலங்களில் மக்களின் வாக்குகளை நேரிடையாகப் பெற்று ஆட்சி அமைத்த மாநிலங்கள் சில மாநிலங்களே; மற்ற பா.ஜ.க. ஆட்சிகளோ தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ், மற்ற கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கியோ, அல்லது வருமான வரித்துறை, அமலாக்கப் பிரிவு, சி.பி.அய். என்று திரிசூலத்தைக் காட்டி, அச்சுறுத்தி, தங்களது ஆதரவாளர்களாக மாறவோ செய்து பொது ஒழுக்கச் சிதைவை ஏற்படுத்தி, பா.ஜ.க. தலைமையிலான ஆட்சிகளை உருவாக்கினர். சிறுபான்மை சமூக மக்கள்மீது எல்லையின்றி கட்டவிழ்த்து விடப்பட்ட வெறுப்பு அரசியல்மூலம் நாடே தங்கள் வசம் என்பதைப்போல ஒரு பொய் முகம் காட்டி, அரசியல் நடத்திவரும் நிலையில், கருநாடகத் தேர்தல் முடிவுகள்மூலம் அந்த மாநில வாக்காளப் பெருமக்கள் எல்லாவற்றிற்கும் பா.ஜ.க.வின் முகத்தில் அறைந்ததைப்போல, பெரும் அதிர்ச்சித் தோல்வியையே பரிசாக அளித்து வெறுப்பு அரசியல் ஆணவத் தாண்டவத்திற்குப் பாடம் கற்பித்துள்ளார்கள்!

“பெரும் தேர்தல் மதியூகி” பிரதமர் மோடி, “ரோட்ஷோ” சாலைப் பேரணிகளை நடத்தி 6, 7 நாள்களுக்குமேல் கருநாடகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, காங்கிரஸ்மீதும் அவதூறுகளை அள்ளிவீசி, சிறுபான்மையினர் அனைவருமே மோசம், நாட்டிற்கு எதிரானவர்கள், மத மாற்ற வேலை செய்கின்றவர்கள் என்பது போன்றும், காங்கிரசையும், நேரு குடும்பத்தையும் தனிப்பட்ட முறையில் தாக்கியும், தன்மீது கருநாடக வாக்காளர்களிடம் பட்சாதாப உணர்வு வர 99 முறை தன்னைத் தாக்கியிருந்தார்கள் என்றும், கேரளா பற்றிய பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். திரைப்படத்தின் பிரச்சார விளம்பரதாரர் போலவுமே பிரச்சாரத்தை இறுதிவரை செய்தார். பூக்களை அவர்மீது பொழிந்தனர்; அவை வாக்குகளாக மாறவில்லை! தேர்தலுக்கு முன்பே, தன் நிதியாக கருநாடகத்திற்கென ஒரு பெருந்தொகையை ஒதுக்கினார்.

சூடானில் உள்நாட்டுப் போரில் சிக்கிய இந்தியர்களை மீட்கும் திட்டத்திற்கு க்கூட (ஒரு தேர்தல் உத்தி போல) “ஆபரேஷன் காவேரி” என்றே பெயரிட்டு, அதை தேர்தல் பிரச்சாரத்திலும் முழங்கினார்!

கூட்டாட்சித் தத்துவத்தையே கேலி செய்வதுபோல், எங்கும் டபுள் என்ஜின் (ஒன்றியத்திலும், மாநிலத்திலும் ஒரே கட்சி, ஆட்சி) ஆட்சியில் இருந்தால்தான் வளர்ச்சி சாதிக்க முடியும் என்று கூறி, அரசமைப்புச் சட்டம் உருவாக்கிய பெருமைகளையே கொச்சைப் படுத்தி, முறையான கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக சவால்விடுவது போன்று பிரச்சாரம் செய்தார்.

அதை கருநாடக வாக்காளர்கள் ஏற்கவில்லையே!

இலவசத்தை எதிர்க்கட்சிகள் தேர்தல் நேரத்தில் அறிவித்ததை மிகவும் பரிகசித்து (ஒரு எம்.பி.யைவிட்டு உச்சநீதிமன்றத்தில் இதுபற்றி வழக்குத் தொடுத்தும் பார்த்த நிலையில்), அக்கட்சி, உத்தரகாண்டிலும் சரி, தெற்கே கருநாடகத்திலும் பா.ஜ.க. இலவச அறிவிப்புகளை வாரி வழங்கியதைச் சுட்டிக்காட்டவே, ‘காஸ் சிலிண்டருக்கு’ மாலை போட்டு, வாக்காளர்கள் வாக்குப் போடத் தொடங்கினர் என்பது அவர்களுக்கு வாக்காளர்கள் தந்த நல்ல பாடமே!

12 அமைச்சர்கள் தோற்றனர் பல ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில்! பா.ஜ.க. சபாநாயகரும் தோல்வியைத் தழுவினார்.

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா சிறுபான்மை யினர்மீது வெறுப்பு நெருப்பைக் கொட்டிப் பேசிய பேச்சும், அவரது இட ஒதுக்கீடுபற்றிய பேச்சால், உச்சநீதிமன்றத்தின் கண்டனக் குரல் அதன்மீது ஒலித்ததும், இந்தத் தேர்தலில் காணப்பட்ட ஒரு விசித்திர அரசியல் அம்சம்!

‘பா.ஜ.க. இல்லாத தென்னாடு’ என்று அரசியல் வரைபடத்தினை தென்னாட்டின் அறிவார்ந்த வாக்காளர்கள் வரைந்து காட்டி வருகின்றனர்!

**எல்லாம் ‘ஒரே, ஒரே’ என்றவர்களுக்குத் தக்கப் பாடம் கருநாடகாவில்!**

இது 2024 ஆம் ஆண்டிற்கு ஒரு முன்னோட்டமேயாகும்!

2014 இல் பதவிக்கு வருமுன் கொடுத்த வாக்குறுதிகள் இன்னமும் செயல்படுத்தப்படாத நிலையில், பா.ஜ.க., “ஒரே நாடு, ஒரே கலாச்சாரம், ஒரே மதம், ஒரே மொழி, ஒரே ரேஷன் கார்டு” என்று நமது நாட்டின் பன்முகத் தன்மையை மாற்றுவதற்கு தென்னாடு ஒருமித்த தனது எதிர்ப்பை இத்தேர்தல்மூலம் நிரூபித்து வருகிறது! கருநாடகம் அதன் சமீபத்திய உதாரணமாகும்.

ஹிந்துத்துவாவை அரசியல் பரிசோதனைக் கூடமாக்கிப் பார்த்தார்கள்; ‘அனுமான் சாலி’ பாடியும், ‘ஜெப பஜ்ரங் தள் பாலி’ முழக்கம் எதுவும் எடுபடாது தென்னாட்டில் என்பதை கருநாடக வாக்காளர்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ள னர். காங்கிரசின் இளந்தலைவர் ராகுல் காந்தி அழகாகக் கூறியுள்ளார்.

“மதத்தையும், ஜாதியையும் நம்பி வெறுப்புப் பிரச்சாரத்தை செய்தவர்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தனர் கருநா டக மக்கள்” என்பதை அழகாகக் கூறி, “வெறுப்புச் சந்தைகள் மூடப்பட்டுவிட்டன; அன்புக் கடைகள் திறக்கப்பட்டன” என்றார். நமது ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அழகாகச் சுருக்கென்று தைக்குமாறு, “திராவிட நிலப் பரப்பிலிருந்து பா.ஜ.க. முற்றிலும் அகற்றப்பட்டு விட்டது” என்று தெளிவாக்கியுள்ளனர்.

கருநாடக வாக்காளர்கள் அண்ணாமலைக்கு “அரோகரோ” பாடி அனுப்பி விட்டனர்!

இந்தியாவின் இதர பகுதிகளும் கருநாடகத்தை முன்னோடியாகக் கொண்டு, ஜனநாயகம், மதச்சார்பின்மை, சமூகநீதி, மாநில உரிமைகளைக் காக்கும் வண்ணம், கருநாடகப் பாதையில் நடைபோடுவது உறுதி!

மக்கள் தயாராகிவிட்டனர்; எதிர்க்கட்சித் தலைவர்களே, உங்களது தன்முனைப்பைத் தள்ளி வைத்து, நாட்டைக் காக்க, பொது எதிரிகளை மட்டும் பார்த்து, அரசியல் வியூகம் அமைக்க ஒன்றுபட்டு உழையுங்கள், வெற்றி நிச்சயம்!

**கருநாடக மக்கள் உங்களுக்கு அதைப் பாடமாக்கி தந்துள்ளார்கள், பயன் பெறுங்கள்!**

224 இடங்களில் 136 இடங்கள் காங்கிரசுக்கு; ஆதரவு 1 ஆக மொத்தம் 137 இடங்கள் தந்து நிலையான ஆட்சி அமைய வாய்ப்பு ஏற்படுத்திய வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்து, மதச்சார்பற்ற தலைவர்களுக்குப் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பா.ஜ.க.வை மக்கள் நிராகரிக்கத் தொடங்கி விட்டனர்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி பேட்டி!



சென்னை, மே 15-

கர்நாடகத்தில் காங்கிரஸ் தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதும் சென்னையில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் காங்கிரஸ் தொண்டர்கள் திரண்டனர். மாநில நிர்வாகிகள் சுமதி அன்பரசு, தளபதி பாஸ்கர், சிரஞ்சீவி, மாவட்ட தலைவர் சிவராஜ சேகரன் உள்ளிட்டோர் முன்னிலையில் பட்டாசுகள் வெடித்து இனிப்பு வழங்கினார்கள்.

தேர்தல் வெற்றி பற்றி தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறிய தாவது:

கர்நாடகத்தில் காங்கிரஸ் மகத்தான வெற்றி பெறும் என்பதை தேர்தல் பிரசாரத்தின் போதே உணர்ந்தோம். ராகுல் காந்தியின் ஒற்றுமை பயணம் மிகப்பெரிய வெற்றியை ஈட்டித் தந்துள்ளது. அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக அல்ல. மக்களிடையே ஒற்றுமையை உருவாக்கத்தான் ராகுல் காந்தி தன்னை வருத்தி அந்த நடைபயணத்தை மேற்கொண்டார். அதன் பலன்தான் இப்போது கர்நாடகத்தில் கிடைத்திருக்கும் வெற்றி.

மக்கள் பா.ஜனதா மீதான நம்பிக்கையை இழந்து விட்டார்கள். கடந்த 7, 8 ஆண்டுகளில் வளர்ச்சியை நோக்கிய அரசியலை பா.ஜனதா முன்னெடுக்கவில்லை. எதிர்மறையான அரசியலை, சின்ன சின்ன பிளவுகளை மையப்படுத்தி அரசியல் செய்தார்கள். அது ஆரம்பத்தில் வெற்றியைக் கொடுத்தாலும் காலப்போக்கில் வெற்றி பெறாது என்பதை ராகுல் உணர்ந்தார்.

அதனால்தான் காந்திய வழியில் அதிகாரத்தை நோக்கிய அரசியல் இல்லாமல் மக்களிடையே ஒற்றுமையை நோக்கிய அரசியலை கையில் எடுத்தார். அதன் முதல் வெற்றிதான் இது. நாட்டில் தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி எல்லாவற்றிலும் மோடி அரசு தோற்று விட்டது. விலைவாசி உயர்வும், வரி விதிப்பும் மக்களை வாட்டி வதைக்கிறது. இந்த நெருக்கடியில் இருந்து நாட்டையும், மக்களையும் ராகுலால்தான் காப்பாற்ற முடியும் என்று மக்கள் உணர்ந்து விட்டார்கள்

இந்த வெற்றிக்கு மல்லிகார்ஜுன கார்கே மிகப்பெரிய தூணாக விளங்கினார். ராகுலின் இளமை வேகம். கார்கேவின் முதுமை அனுபவம் ஆகிய இரண்டும் வெற்றிக்கு முக்கிய காரணம். மக்கள் பா.ஜனதாவை நிராகரிக்கத் தொடங்கி விட்டார்கள். அடுத்து வரும் நாடாளுமன்ற தேர்தலில் நாடாளுமன்றமும் காங்கிரஸ் வசமாகும்.

இவ்வாறு கே.எஸ்.அழகிரி கூறினார்.

### கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்ட மைதானம்!

# திருவாரூரில் ஆ.ராசா எம்.பி., ஆய்வு!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ.- பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர், மே.15

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டமேடை அமையவிருக்கும் மைதானத்தை முன்னாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. ஆய்வு மேற்கொண்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே. கலைவாணன், பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழகத்தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி திருவாரூரில் நடைபெற இருக்கிறது. அப்போது திருவாரூர் காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட கலைஞர் கலைக் கோட்டம் திறப்புவிழாவும் அகில இந்திய தலைவர்கள் பங்கேற்கும் பொதுக்கூட்டமும் நடைபெற இருக்கிறது.

திருவாரூர் காட்டூரில் பொதுக்கூட்டம் நடைபெற இருக்கும் பிரமாண்ட மைதானத்தை முன்னாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. ஆய்வு செய்தார். பின்னர் காட்டூரில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செய்தனர்.

மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ, பிரபாகரன் எம்.எல்.ஏ., ஒன்றிய செயலாளர் சேகர் கலியபெருமாள், நகர செயலாளர் வாரை.பிரகாஷ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள்

# பகுதிக் கழக செயலாளர்கள் - வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச்செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள்.வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று ( 15.05.2023) திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி ,ஸ்டாரன்ஸ் சாலை எம்.கே.டி.மகாலில் மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் , மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள்அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



அந்தமான் மாநில தி.மு. கழகத்தின் சார்பில் 13–05–2023 அன்று அந்தமான் போர்ட்பிளேர் கலைஞர் அறிவாலயத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடுவது சம்பந்தமாக செயற்குழு கூட்டம் மாநில தலைவர் மருதவானன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில இலக்கிய அணி துணை அமைப்பாளர் பெருநாழி வி.போஸ் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். மாநில அமைப்பாளர் குழந்தை, மாநில பொருளாளர் ரவிச்சந்திரன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ராஜா, மருதவாணன் செயற்குழு உறுப்பினர்கள் காளிதாஸ், ராஜா, ஜாகிர்உசேன், விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சென்னை தெற்கு மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்-அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் நாளை (16.05.2023 செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணி அளவில், நீலாங்கரையில் உள்ள சுகன்யா திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட தொகுதி மேலிடப் பார்வையாளர்கள், பகுதிக்கழக செயலாளர்கள், ஒன்றியக்கழக செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள்,வட்டக் கழக செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், இளைஞரணி, மகளிரணி, மாணவரணி, மீனவரணி, மகளிர் தொண்டர் அணி, தொழிலாளரணி, தொண்டரணி, தகவல் தொழில் நுட்ப அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, இலக்கிய அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி, விவசாய அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**பொருள்:** கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர்
சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.